சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை

முன்னிலை: திருமதி. வி.பி.சுகந்தி, எம்.எல்.,
சார்பு நீதிபதி, ஊத்தங்கரை

2018-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28-ஆம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்:116/2016**

1.அசோக்குமார்
2.ஏழுமலை ..வாதிகள்

/எதிராக/

1.கமலா
2.ராஜா
3.மூர்த்தி
4.செல்வம்
5.அமுதா
6.கௌரி
7.குமார்
8.சுரேஷ்
9.நதியா ..பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 22.06.2018-ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.இராஜிவ்காந்தி அவர்கள் ஆஜராகியும், 2-வது பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.கே.இராமசாமி அவர்கள் வழக்குரை அதிகாரம் தாக்கல் செய்தும், 1,4,5 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.எஸ். மூர்த்தி அவர்கள் வழக்குரை அதிகாரம் தாக்கல் செய்தும், 6,8,9 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், 3-வது பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.பி.பாலசந்தர் அவர்கள் வழக்குரை அதிகாரம் தாக்கல் செய்தும், 1,2,3,4,5 பிரதிவாதிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், வாதி தரப்பு கேட்கப்பட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்:

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களை நலந்தீது கலந்து 6 சம பாகங்களாகப் பிரித்து அதில் 2 ½ /6 பங்கினை வாதிகளுக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் வழங்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டு ஒரு முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தின் தனி சுவாதீனம் அடைய இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் அனுமதி அளித்தும், தாவா சொத்தில் இறுதி தீர்வு ஏற்படும்வரை தாவா சொத்து குறித்து எந்தவிதமான ஆவண மாற்றமும் 2-ஆம் பிரதிவாதி மேற்கொள்ளக் கூடாது என்று நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்து குறித்து கனகம்மாள் கடந்த 08.03.2004-ஆம் தேதியில் தானபத்திர எண் 475/2004 என மோசடியாக எழுதி வைத்துள்ள தானப்பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்கக் கோரியும் இவ்வழக்கு செலவுக்காகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா ஆகும்.

**2.தாவா பிராதின் சுருக்கம்:**

தாவா 1-ஆம் இனச் சொத்து ஆதியில் வாதிகளின் கொள்ளு தாத்தாவான தோலன் (எ) முனியனுக்கு பாத்தியப்பட்ட சொத்து. தாவா 2-ஆம் இனச் சொத்து நத்தம் புறம்போக்காக இருந்து தோலன் (எ) முனுசாமி கூரை வீடு கட்டி அனுபவித்து வந்தார். அதன் பிறகு தாவா 2-வது இனச் சொத்துக்கு பட்டா வழங்கப்பட்டது. தோலன் (எ) முனியப்பனுக்கு குப்பு என்பவர் மனைவி. மேற்படியார்களுக்கு கொளந்தைபையன், முனுசாமி, முனியம்மாள் ஆகியோர் வாரிசுகள். தோலன் (எ) முனியன் உயிருடன் இருந்தவரை தாவா சொத்துக்களை கொளந்தைபையன், முனுசாமி, முனியம்மாள் ஆகியோர் கூட்டாக அனுபவித்து விவசாயம் செய்து வந்தனர். தோலன் (எ) முனியன் என்பவர் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது மனைவி குப்பு சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். கொளந்தைபையனுக்கு அமராவதி அம்மாள் என்பவர் மனைவி. மேற்படியார்களுக்கு 1.4.1954 தேதியில் பிறந்தவர் தான் 1-வது பிரதிவாதி. அதன் பிறகு கொளந்தைபையனுக்கும், அவரது சகோதரர் முனுசாமி

மனைவியான நடுப்பி அம்மாளுக்கும் கள்ள உறவு ஏற்பட்டு அதனால் அமராவதி அம்மாள் அவரது தாய் வீட்டுக்குச் சென்று அங்கு முனுசாமி என்பவருடன் வாழ்ந்து வந்தார்.

கொளந்தைபையனின் சகோதரர் முனுசாமிக்கு நடுப்பி அம்மாள் மனைவி ஆவார். மேற்படியார்களுக்கு சுந்தரம்மாள், யசோதா, ஆகியோர் வாரிசுகள். அதன் பிறகு கொளந்தைபையனுக்கும், நடுப்பி அம்மாளுக்கும் ஏற்பட்ட கள்ள உறவின் காரணமாக பிறந்தவர் 2-வது பிரதிவாதி. மேற்படி கள்ள உறவின் காரணமாக முனுசாமி 1958-ஆம் ஆண்டு இறந்து விட்டார். நடுப்பி அம்மாள் 1961-ல் இறந்துவிட்டார். முனுசாமியின் மகளான சுந்தரம்மாள் திருமணம் எதுவும் செய்யாமல் 1969-ல் இறந்து விட்டார். முனுசாமியின் மகளான யசோதாவிற்கும் சிங்காரம் என்பவரும் திருமணம் நடைபெற்று அதன் மூலம் 1,2 வாதிகள் பிறந்தனர். யசோதா 2003-லும், சிங்காரம் 2016-லும் இறந்து விட்டார்கள். நடுப்பி அம்மாள் இறந்த பிறகு கொளந்தைபையனுக்கு கனகம்மாள் என்பவருடன் கள்ள உறவு ஏற்பட்டு அதன் மூலம் 9 குழந்தைகள் பிறந்து, பிறந்த உடனேயே இறந்துவிட்டது. கனகம்மாள் சுமார் 11 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

தோலன் (எ) முனியன் மகளான முனியம்மாளுக்கு கோவிந்தன் என்பவருடன் திருமணம் நடைபெற்று அதன் பயனாக பெருமாள் (எ) குலசன், ராஜா, மூர்த்தி, சகுந்தலா, சித்ரா ஆகியோர் பிறந்தனர். சகுந்தலா, சித்ரா ஆகியோர் திருமணம் செய்துக் கொள்ளாமலும், வாரிசு ஏதுமின்றியும் இறந்துவிட்டனர். பெருமாள் (எ) குசலன் 1-வது பிரதிவாதியை திருமணம் செய்துக் கொண்டார். பெருமாள் (எ) குசலனுக்கும், 1-வது பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள் 4,5 பிரதிவாதிகள். பெருமாள் (எ) குசலன் 13.7.2016-ஆம் தேதி 1,4,5 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். முனியம்மாளின் மகனான ராஜாவுக்கு 6-வது பிரதிவாதி மனைவி. ராஜா, 6 முதல் 9 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு 2011-ஆம் ஆண்டு இறந்து விட்டார். 3-வது பிரதிவாதி, முனியம்மாளின் மகன் ஆவார்.

தோலன் (எ) முனியன் இறந்த பிறகும், முனுசாமி, நடுப்பி அம்மாள் இறந்த பிறகும், முனியம்மாள், கோவிந்தன், சுந்தரம்மாள், சகுந்தலா, சித்ரா, யசோதா, சிங்காரம், ராஜா, பெருமாள் (எ) குசலன் ஆகியோர் இறந்த பிறகு, தாவா சொத்துக்களை வாதிகள் மற்றும் 1, 3 முதல் 9 வரையான பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து விவசாயம் செய்து வருகின்றனர். கூட்டுக்குடும்ப பொது சொத்து குறித்து இதுநாள் வரை பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. இந்த நிலையில் பெருமாள் (எ) குசலன் கடந்த 13.07.2016-ஆம் தேதியில் இறந்த பிறகு, தாவா சொத்துக்கள் குறித்து வாதிகள் மற்றும் 1,3 முதல் 9 வரையான பிரதிவாதிகளின் பெயரில் பாகப்பிரிவினை செய்துக்கொள்ள கடந்த 15.07.2016-ஆம் தேதியில் அளவீடுகள் செய்ய சென்றபோது, 2-வது பிரதிவாதி தனக்கு பாகம் உள்ளதாகவும், தாவா சொத்து பொறுத்து கொளந்தை பையன் தன் பெயரில் உயில்பத்திரம் எழுதி வைத்ததாகவும், பிறகு அந்த உயில் பத்திரத்தை ரத்து செய்து விட்டதாகவும், கொளந்தைபையன் இறந்த பிறகு, கனகம்மாள் தாவா சொத்தின் ஒரு பகுதி குறித்து தனக்கு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டதாகக் கூறினார்.

தாவா சொத்தின் உண்மை நிலை அறியும் பொருட்டு, வாதிகள் தாவா சொத்து குறித்து வருவாய் துறை ஆவணங்களைப் பரிசீலனை செய்தபோது, தாவா 1-ஆம் இனச் சொத்திற்கு பட்டா எண் 82 என கொளந்தைபையன் பெயரில் உள்ளது. ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் பத்திர பதிவேடுகளை பரிசீலனை செய்தபோது, கொளந்தைபையன் கடந்த 19.06.1996 தேதியில் உயில் பத்திரம் எழுதியுள்ள விவரமும், அதன் பின்னிட்டு 25.02.2002-ஆம் தேதியில் அதனை ரத்து செய்த விவரமும் தெரிய வந்தது. தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று பெற்று பார்த்தபோது தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாத கனகம்மாள், கொளந்தைபையனுக்கும், தனக்கும் 2-வது பிரதிவாதி மகன் என்று குறிப்பிட்டு தாவா சொத்துக்களில் பொதுவில் பாதி பாத்தியம் இருப்பதாகவும், அதனை 2-வது பிரதிவாதிக்கு தானம் எழுதி வைப்பதாக குறிப்பிடப்பட்டுளிளது. தாவா சொத்தில் யாதொரு உரிமையும் இல்லாத கனகம்மாளுக்கு, அவ்வாறு` அதனை 2-வது பிரதிவாதிக்கு தானம் எழுதிக் கொடுக்க அவருக்கு யாதொரு

உரிமையும் இல்லை. அந்த தானப்பத்திரம் மோசடியானது, சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அந்த தானப்பத்திரம் அமுலுக்கு வரவில்லை.

தோலன் (எ) முனியன் 2005-ஆம் ஆண்டுக்கு முன்பே இறந்துவிட்டதாலும், 1956 இந்து வாரிசுரிமைச் சட்டப்படியும், சட்டம் 1/2005-ன்படியும், தாவா சொத்தில் தோலன் (எ) முனியனின் ஆண் வாரிசுகளான கொளந்தைபையன், முனுசாமி ஆகியோருக்கு பொதுவில் ½ வரிசை பாத்தியமும், மீதமுள்ள பொதுவில ் ½ வரிசை பங்கினை கொளந்தைபையன், முனுசாமி, முனியம்மாள் ஆகியோர் அடையத்தக்கவர்கள் ஆவார்கள். அதன்படி தாவா சொத்தில் கொளந்தைபையனுக்கு உரிய 2 ½ /6 பங்கினை கொளந்தைபையனுக்கும், அமராவதி அம்மாளுக்கும் பிறந்த சட்டப்படியான ஒரே வாரிசான 1-வது பிரதிவாதி அடையத்தக்கவர். இறந்துவிட்ட முனுசாமிக்கு உரிய 2 ½ /6 பங்கினை அவரது மகள்களான சுந்தரம்மாள், யசோதா ஆகியோர் அடையத்தக்கவர்கள். சுந்தரம்மாள் திருமணமாகாமல் 1969-ஆம் ஆண்டே இறந்துவிட்டதால், முனுசாமிக்கு உரிய பங்கினை யசோதா மட்டுமே அடையத்தக்கவர். யசோதா 2003-ஆம் ஆண்டும், யசோதாவின் கணவர் 2016-ஆம் ஆண்டு வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்ட காரணத்தால், முனுசாமிக்கு உரிய 2 ½ /6 பங்கினை வாதிகள் மட்டுமே அடையத்தக்கவர்கள் ஆவார்கள். தாவா சொத்தில் இறந்துவிட்ட முனியம்மாளுக்கு 1/6 பங்கு பாகம் உள்ளது. அதனை முனியம்மாளின் வாரிசுகளான பெருமாள் (எ) குசலன், ராஜா, 3-வது பிரதிவாதி, சகுந்தலா, சித்ரா ஆகியோர் அடையத்தக்கவர்கள். சகுந்தலா, சித்ரா ஆகியோர் திருமணம் ஏதுமின்றி வாரிசுக்ள ஏதுமின்றி இறந்துவிட்டதாலும், ராஜா 2011-ஆம் ஆண்டு இறந்துவிட்டதாலும், பெருமாள் (எ) குசலன் 2016-ஆம் ஆண்டு இறந்துவிட்டதாலும், தாவா சொத்தில் முனியம்மாளுக்குரிய 1/6 பங்கினை 1,3 முதல் 9 பிரதிவாதிகள் கூட்டாக அடையத்தக்கவர்கள். 2-வது பிரதிவாதி கொளந்தையப்பனுக்கும், நடுப்பி அம்மாளுக்கும் கள்ள உறவின் மூலம் பிறந்தவர் என்பதால் தாவா சொத்தில் அவருக்கு எந்தவிதமான பாத்தியமும் உரிமையும் இல்லை. தாவா சொத்து குறித்து மோசடியான தானப்பத்திரத்தை 2-வது பிரதிவாதியின் பெயருக்கு ஏற்படுத்தியுள்ளதால், 2-வது பிரதிவாதியை இந்த

தாவாவில் தரப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு 2-வது பிரதிவாதி ஒரு வழக்கறிஞர் மூலமும், 3-வது பிரதிவாதி ஒரு வழக்கறிஞர் மூலமும், 1,4,5 பிரதிவாதிகள் ஒரு வழக்கறிஞர் மூலமும் ஆஜரானார்கள். ஆனால் மேற்படியார்கள் தரப்பில் போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டார்கள். 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு முறைப்படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டார். எனவே மேற்படி வழக்கானது ஒருதலைபட்ச விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது. அந்த வகையில் வாதி தரப்பில் முதலாவது வாதி தன்னை வா.சா.1-ஆக விசாரித்துக் கொண்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் 5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

4. வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தாவாவில் கூறியுள்ள சங்கதிகளையே தெரிவித்துள்ளார். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் கொளந்தைபையனின் பெயரில் உள்ள பட்டாவை வா.சா.ஆ.1-ஆகவும், கொளந்தைபையனின் இறப்புச் சான்றிதழல் அசலை வா.சா.ஆ.2-ஆகவும், கொளந்தைபையன் 2-வது பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த உயில் பத்திரத்தின் உண்மை நகலை வா.சா.ஆ.3-ஆகவும், அதனை ரத்து செய்ததற்கான ரத்துப் பத்திரத்தை வா.சா.ஆ.4-ஆகவும், கனகம்மாள், 2-வது பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த தானப்பத்திரத்தை வா.சா.ஆ.5-ஆகவும் தாக்கல் செய்துள்ளார். வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மறுக்கும் வகையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பினைத் தெரிவிக்கவில்லை. அதேபோல் கொளந்தைபையன், அவரது சகோதரரான

முனுசாமியின் மனைவி நடுப்பி அம்மாளுடன் கள்ள உறவு வைத்துக் கொண்டு அதன் மூலம் பிறந்தவர் தான் 2-வது பிரதிவாதி என்றும், அதனால் அவருக்கு தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் இலலை என்று வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதியையும் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும் கொளந்தைபையன் 2-வது பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த உயில் பத்திரத்தை அவரே ரத்து செய்துள்ளார் என்பது வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4னை பரிசீலனை செய்கையில் தெரிய வருகிறது. கொளந்தைபையன் 1.2.2004-ஆம் தேதி இறந்த பிறகு அவர் சேர்த்துக் கொண்டதாக வாதிகளால் கூறப்படும் கனகம்மாள் என்பவர் 2-வது பிரதிவாதி பெயரில் தாவா 1-வது இனச் சொத்து குறித்து தானம் எழுதி வைத்ததாகத் தெரிவித்து, அதன் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.5-ஆக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கனகம்மாள், கொளந்தைபையனின் சட்டப்படியான மனைவி அல்ல என்று வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு எவ்வாறு தாவா 1-வது இனச் சொத்தில் உரிமை வந்தது என்பதையும், எந்த உரிமையின் அடிப்படையில் அதனை அவர் 2-வது பிரதிவாதிக்கு தானம் எழுதிக் கொடுத்தார் என்பதையும் நிரூபிக்க வேண்டிய கடமை 2-வது பிரதிவாதிக்கு உ்ளளது. ஆனால் 2-வது பிரதிவாதி தரப்பில்` அதனை நிரூபிக்கப்படவில்லை. எனவே தாவா சொத்து பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டுக்குடும்பச் சொத்து என்று வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில், அது ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டதா இல்லையா என்பதை பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்திருக்க வேண்டும. ஆனால் அவ்வாறு பிரதிவாதிகள் செய்யாமல் தோன்றாத்தரப்பினர்களாகியுள்ள நிலையில், வாதிகள் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5). 1. **முடிவாக, தாவாசொத்தை நலந்தீது கலந்து, 6 சம பாகங்களாகப் பிரித்து, அதில் வாதிகளுக்குரிய 2½ பங்கு சொத்தினை, வாதிகளுக்கு, பிரதிவாதிகள் தனிசுவாதீனத்துடன் ஒப்படைக்க செலவுத் தொகையுடன் முதல்நிலைத் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.**

**2. தாவா சொத்து குறித்து கனகம்மாள் கடந்த 08.03.2004-ஆம் தேதி 2-வது பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த தானபத்திரம் செல்லாது என்று அறிவிக்கப்படுகிறது.**

**3. தாவாசொத்தில் இறுதித்தீர்வு ஏற்படும்வரை, 2-வது பிரதிவாதி எவ்வித ஆவண மாற்றமும் ஏற்படுத்தக்கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 28.06.2018-ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்.வி.பி.சுகந்தி.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

வா.சா.1 .. ஏழுமலை

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:

வா.சா.ஆ.1 .. 18.07.2016/கொளந்தைபையன் பெயரில் உள்ள கணிணி பட்டா எண் 82

வா.சா.ஆ.2 .. 1.2.2004/ கொளந்தை பையனின் இறப்புச் சான்று அசல்

வா.சா.ஆ.3 .. 19.06.1996/கொளந்தைபையன், தாவா 1-வது இனச் சொத்து குறித்து 2-வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல

வா.சா.ஆ.4 .. 25.02.2002/உயில் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.5 .. 08.03.2004/கனகம்மாள், தாவா 1-வது இனச் சொத்து குறித்து 2-வது பிரதிவாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரம் சான்றிட்ட நகல்

ஒம்.வி.பி.சுகந்தி.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை